ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்

व.उ.चिदम्बरनार पत्तन न्यास

# V.O.Chidambaranar Port Trust

(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

SAGARMALA
PORT-LED PROSPERITY
website URL : www.vocport.gov.in

Press Release No: 30 Date:21.09.2020

**Shri Mansukh L Mandaviya, Hon'ble Union Minister of State (Independent Charge) for Ministry of Shipping & Minister of State for Chemical & Fertilizers and Mrs Aishath Nahula, Hon'ble Minister of Transport and Civil Aviation of Maldives, Republic of Maldives, jointly launched the Cargo ferry service from India (Tuticorin and Cochin) to Maldives (Kulhudhuffushi and Male) through Video Conference**



The Hon'ble Minister of State (Independent Charge) Shipping, Shri Mansukh L. Mandaviya and the Minister of Transport and Civil Aviation of Maldives, Ms Aishath Nahula, on 21.09.2020, jointly launched a direct cargo ferry service between India and Maldives.

The launch of this service concretely fulfills the commitment made by Prime Minister Shri Narendra Modi during his visit to Maldives in June last year and the announcement made by External Affairs Minister Dr S. Jaishankar during his virtual meeting with the Foreign Minister of Maldives on August 13, 2020. During its maiden journey, a vessel 'MCP Linz' with a capacity of 200 TEUs of containers and 3000 Tonnes of general cargo will be carrying
16 TEUs of containers and 2000 Tonnes of Cement from Tuticorin. The vessel will sail from Tuticorin to Kochi today, from where it will proceed to Kulhudhuffushi Port in North Maldives and then to Male Port. It is scheduled to reach Kulhudhuffushi on September 26, 2020 and Male on September 29, 2020. This ferry service, being operated by the Shipping Corporation of India will run thrice a month and will provide a cost effective, direct and alternate means of transportation of goods between India and Maldives.

Speaking on the occasion, Minister of State (Independent Charge) Shipping noted that this service is another milestone in the comprehensive bilateral relations between India and Maldives. He mentioned that this direct cargo service will further cement the close ties between India and Maldives by enhancing people-to-people contact and boosting bilateral trade.

The Minister of Transport and Civil Aviation of Maldives, Ms Aishath Nahula expressed deep appreciation for the launch of the service as reflective of the close ties of friendship and cooperation between India and Maldives. She informed that an event will be organized for receiving the ferry at Kulhudhuffushi port, which will be attended by her, Foreign Minister of Maldives Abdulla Shahid and Members of Parliament of Maldives.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

PUBLIC RELATIONS OFFICER

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்

व.उ.चिदम्बरनार पत्तन न्यास

V.O.Chidambaranar Port Trust

ISO9001:2015, ISO 14001 : 2015, OHSAS 18001:2007 & ISPS Compliant Port

SAGARMALA PORT-LED PROSPERITY

(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu

Public Relations Office

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கைசெய்திஎண்:30 | தேதி: 21.09.2020

**திரு. மன்சுக் மண்டவியா, மாண்புமிகு மத்திய கப்பல் துறை இணை அமைச்சர் மற்றும் இராசயனம் மற்றும் உரங்கள் இணை அமைச்சர் அவர்களும் மற்றும் திருமதி ஆயிஷத் நஹீலா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் பயணிகள் விமான போக்குவரத்து அமைச்சர், மாலத்தீவு குடியரசு அவர்களும் இணைந்து இந்தியாவில் இருந்து (தூத்துக்குடி மற்றும் கொச்சின்) மாலத்தீவு (குல்ஹுதுபுஷி மற்றும் மாலே) வரையிலான சரக்கு போக்குவரத்து சேவையினை துவக்கி வைத்தார்கள்**



திரு. மன்சுக் மண்டவியா, மாண்புமிகு மத்திய கப்பல் துறை இணை அமைச்சர் மற்றும் இராசயனம் மற்றும் உரங்கள் இணை அமைச்சர் அவர்களும், திருமதி ஆயிஷத் நஹீலா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் பயணிகள் விமான போக்குவரத்து அமைச்சர், மாலத்தீவு குடியரசு அவர்களும் இணைந்து இந்தியாவில் இருந்து (தூத்துக்குடி மற்றும் கொச்சின்) மாலத்தீவு (குல்ஹுதுபுஷி மற்றும் மாலே) வரையிலான சரக்கு போக்குவரத்து சேவையை 21.09.2020அன்று மாலை 2.30 மணியளவில் காணொலி காட்சி மூலம் துவக்கி வைத்தார்கள்.

கடந்த ஆண்டு ஜீன் மாதம் மாண்புமிகு பாரத பிரதமர் திரு நரரேந்திர மோடி அவர்கள் மாலத்தீவிற்கு விஜயம் செய்த போது அளித்த உறுதிபாட்டையும் மத்திய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஜெயசங்கர் அவர்கள் மாலத்தீவு வெளியுறவுதுறை அமைச்சருடன் காணொலி காட்சி மூலம் 13.08.2020 அன்று நடந்த கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கையினை உறுதிப்படுத்தும் வகையில் இக்கப்பல் சேவை துவக்கப்பட்டிருக்கிறது.

இக்கப்பல் சேவையின் துவக்கமாக, 3000 டன் பொது சரக்குகளையும் 200 டிஇயு சரக்குப்பெட்டங்களையும் எடுத்து செல்லும் திறன் கொண்ட எம்சிபி லின்ஸ் (MCP Linz) என்ற இக்கப்பலில் 16 டிஇயு சரக்குபெட்டகங்களையும், 2000 டன் சிமெண்டையும் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திலிருந்து ஏற்றி கொண்டு கொச்சின் துறைமுகத்திற்கு இன்று புறப்பட்டு கொச்சி துறைமுகத்தை அடைந்து அங்கு மேலும் பல்வேறு சரக்குகளை ஏற்றி கொண்டு மேற்கு மாலத்தீவிலுள்ள குல்ஹுதுபுஷி துறைமுகத்தை 26.09.2020 அன்று அடைந்து அதன்பின் மாலே துறைமுகத்தை 29.09.2020 அன்று சென்றடையும். இக்கப்பல் சேவையை இந்திய கப்பல் கழகம் மாதத்திற்கு 3 முறை இயக்கும். இச்சேவையின் மூலம் குறைந்த செலவில் சரக்குகளை நேரடியாக இந்தியாவிலிருந்து மாலத்தீவிற்கு எடுத்து செல்ல முடியும்.

இந்நிகழ்வில் திரு. மன்சுக் மண்டவியா, மாண்புமிகு மத்திய கப்பல் துறை இணை அமைச்சர் மற்றும் இராசயனம் மற்றும் உரங்கள் இணை அமைச்சர் அவர்கள் கூறுகையில் 'இந்தியாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையேயான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு இக்கப்பல் சேவை மேலும் ஒரு மைல்கல்லாக அமையும் என்று குறிப்பிட்டார்'. மேலும் இக்கப்பல் சேவை இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல் மாலத்தீவு மற்றும் இந்திய மக்களிடையே நல்உறவினை மேம்படுத்துதற்கு உறுதுணையாக அமையும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் திருமதி ஆயிஷத் நஹீலா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் பயணிகள் விமான போக்குவரத்து அமைச்சர், மாலத்தீவு குடியரசு அவர்கள் கூறுகையில் இந்தியாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையேயான நெருங்கிய உறவின் பிரதிபலிப்பாக இன்று துவக்கப்பட்டுள்ள இக்கப்பல் சேவை அமைந்துள்ளது என்று கூறினார். மேலும் இக்கப்பல் குல்ஹுதுபுஷி துறைமுகத்தை அடையும் தருணத்தில் இக்கப்பலை வரவேற்பதற்கான நிகழ்வு ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவ்விழாவில் தானும் திரு. அப்துல்லா ஷாஹித், வெளியுறவு அமைச்சர், மாலத்தீவு குடியரசு மற்றும் மாலத்தீவு பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்பார்கள் என்று கூறினார்.

மேற்சொன்னதகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ளபத்திரிக்கைசெய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி